மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 21/70) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு 2, பிரிவு 1 முகப்புரை, நெடுத்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: "இம்மசோதா நிறை வேற்றப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்ட மாக நிறைவேற்றப்பட்டது.

(எ) தமிழ் நாடு 1970-ஆம் ஆண்டு பொது விற்பனைவரி (நான்காம் திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 21/70)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) மசோதா *(சட்டப் பேரவை மசோதா எண் 22/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழி கிறேன்.

தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 3-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின்படி, மேற்படி சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் கண்டுள்ளவையும், அந்த விவர அட்டவணையில் சொல்லியுள்ள வேறு எவையேனும், சரக்குகளைத் தயாரிப்பதில் உதிரிப் பாகங்களாகப் பயன்படுத்தும் சரக்குகளின் விற்பனை மீது இரண்டு சதவீத சலுகை வீதத்தில், வரி விதிக்கப்படு கிறது. மேற்படி சட்டத்தில் 3-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரி வில் கண்ட விளக்கத்தில் மேற்படிச் சலுகை வீதம் கிடைக்க வேண்டு மானால், வேலை நிறைவு பெற்ற பொருளில் அந்த உதிரிப்பாகம் அடை யாளங்கண்டு கொள்ளத்தக்க பாகமாக அமைய வேண்டும். எந்த வொரு உதிரிப்பாகம் தனியாக அடையாளம் கண்டு கொள்ளத்தக்க தாக இருந்து இரசாயன முறையில் அல்லாமல் இயந்திர முறையில் பிரிக்கப்படத்தக்கதாக உள்ளதோ, அத்தகைய உதிரிப்பாகத்திற்கு மட்டுமே மேற்படிச் சலுகை கிடைக்க வேண்டுமென்பதே அரசின் விருப்பமாகும். சென்னை அரசுக்கும்—ஆர். எம். கிருஷ்ணசாமி நாயுடுக்கும் நடைபெற்ற வழக்கில் (26 எஸ்.டி.சி. 42), தலைமை நீதி மன்றம் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளது:—

"ஓர் உதிரிப் பாகம் இரசாயன பரிசோதனை மூலமோ அல்லது வேறு பரிசோதனை மூலமோ, மேற்படிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வேலை நிறைவு பெற்ற ஒரு பொரு ளின் உதிரிப் பாகமாக அடையாளம் கண்டு கொள்ளத்தக்கதாக

* 28—8—1970-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

இருந்தால், மேற்படிச் சட்டத்தில் 3-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவில் கண்ட விளக்கத்தின் தாத்பரியப்படி, அது அடையாளங் கண்டு கொள்ளத்தக்க உதிரிப்பாகமாகும். அத்தகைய உதிரிப் பாகத்தின் விற்பனை குறித்து மேற்படி 3-வது பிரிவில் (3) உட்பிரிவின் கீழ் சலுகை வரி வீதம் பொருந்தும்.''

மேற்சொன்ன தீர்ப்பின் விளைவாக, ஏற்கனவே வரி விதிப்புகள் முடிவு செய்யப்பட்டுள்ள நேர்வுகளில் வணிகர்கள் பணம் திருப்பிக் கொடுக்கும்படிக் கேட்கலாம். முடிவெடுக்கப்படாமல் உள்ள நேர்வுகளில், சந்தர்ப்பத்திற்கேற்ப வரிவிதிப்பு அதிகாரிகள் அல்லது மேல் முறையீட்டு அதிகாரிகள் பணத்தைத் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும். இந்த இடர்ப்பாட்டை நீக்கும் பொருட்டு, மேற்படிச் சட்டத்தின் 3-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவில் கண்ட விளக்கத்தை முந்தியவொரு தேதி முதல் செயலுக்குவரும் விதத்தில் திருத்த அரசு முடிவு செய்துள்ளது. ஆனல், எந்த உதிரிப் பாகங்கள் தனியாக அடையாளங்கண்டு கொள்ளத்தக்கவையாயிருந்து, இரசாயன முறையில் அல்லாமல் இயந்திர முறையில் மட்டுமே பிரிக்கப்பட இயலுமோ அத்தகைய உதரிப் பாகங்களுக்கு மட்டும் அவ்வரி வீதம் பொருந்தும் என்று அத் திருத்தத்தின் மூலம் தெளிவாக்கப்பட்டுள்ளது. எந்த நேர்வுகளில் சலுகை வரிவீதம் பொருந்தவில்லையோ, அவற்றைப் பொறுத்தவரையில், ஏற்கனவே செய்துள்ள வரிவிதிப்பையும் வசூலையும் செல்நிறன் ஆக்குவதெனவும் அரசு முடிவு செய்துள்ளது.

மேற்படி முடிவுகளைச் செயலுக்குக் கொண்டுவரும் பொருட்டு தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காவது திருத்த) மசோதா (சட்டமன்றப் பேரவை மசோதா எண் 22/70) அறிமுகம் செய்யப்பட்டு அது இப்போது பேரவையின் ஆலோசனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தை பேரவை ஏற்குமாறு நான் வேண்டுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி. தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்த வரையில் நான் ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மசோதா என்ன காரணத்திற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை விளக்குகிற நேரத்தில், அமைச்சர் அவர்கள் நம் மாநில அரசாங்கத்திற்கும் திரு. ஆர். எம். கிருஷ்ணசாமி நாயுடு என்பவருக்கும் நடைபெற்ற வழக்கின் விளைவாக ஏற்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் இம்மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். சில முடிவுகளை அல்லது சில சட்டங்களை இந்த மன்றம் இயற்றுகிற நேரத்தில் அந்தச் சட்டம் அல்லது அந்த முடிவு சரியானதல்ல அல்லது அது நியாயமானதல்ல அல்லது அது சட்டவிதிமுறைகளுக்குப் பொருந்துவதாகயில்லை என்ற அடிப்படையில் உயர்நீதிமன்றமோ அல்லது தலைமை நீதிமன்றமோ தள்ளுபடி செய்கிறநேரத்தில் உங்களுக்கு அந்த அதிகாரம் இருந்தால் உங்களுடைய தீர்ப்பு செல்லுபடியாகாது அல்லது அதை செயலாற்ற முடியாத நிலைக்கு ஆக்கும் அதிகாரம் எனக்கு இருக்கிறது என்ற விதத்தில் அத்தீர்ப்பைத் தவிர்க்கும் விதத்தில் சட்டத்தைச் செய்யமுடியும் என்ற விதத்தில் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி

அவ்வப்போது நாம் செய்து கொண்டிருக்கிறோமா அல்லது அதை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறோமா என்ற அச்சம் எனக்கு ஏற்படு கிறது. (குறுக்கீடு) பழைய சர்க்காரும் செய்ததுதான், எப்போதும் நடக்கிறதுதான் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். பழைய அரசாங்கம் தவறு செய்தது என்றால், இந்த அரசாங்கமும் பழைய அரசாங்கத்தினர் பாதையில்தான் சென்று கொண்டிருக் கிறதா என்ற அச்சம் எனக்கு ஏற்படுகிறது.

ஏற்கனவே வசூலிக்கப்பட்ட பணத்தை திரும்பவும் செலுத்த வேண்டிய நிலை அத்தீர்ப்பின் விளைவாக ஏற்பட்டு விடும் என்று சொன்னார்கள். அந்நிலையை வேண்டுமானால், அரசாங்கம் வசூலித்து விட்டதை திரும்பச் செலுத்தும் விதத்தில் யார் யார் எங்கெங்கு இருக்கிறார்கள், எப்படிக் கொண்டு போய் கொடுப்பது என்ற நிலை யில்லாமல் அதைத் தவிர்ப்பதற்கு வேண்டுமானால், அதைத் திரும்பச் செலுத்தாமல் இருக்கும் முறையில் வேண்டுமானால் சட்டம் கொண்டு வரலாமே தவிர இனிமேல் எப்போதும் இப்படித்தான் செய்வோம் என்ற அளவில் சட்டத்தை அமைத்துக்கொள்வது நல்லதாகயிருக் காது. நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் இந்தத் திருத்த மசோதா வந்திருக்கிறது. நம் உயர்நீதி மன்றங்களை முழுமையாக மதிக்கிற அளவில் இத்திருத்த மசோதாவைப் பொறுத்தவரையில் ஏற்கனவே வசூலித்ததைத் திரும்பத்தராமல் இருப்பதற்குரிய முறையில் நாம் சட்டத்தை வேண்டுமானால் கொண்டுவரலாம். ஆனால் இனிமேலும் ஏற்கனவே வசூலித்ததைப் போல் இனியும் வசூலிப்போம் என்று சொல்லக் கூடிய முறையில் ஒரு மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றுவது நல்லதல்ல. ஆகவே இதை மறுபடியும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Though this amendment appears to be inocuous and this is as a matter of fact just to regularise something that went wrong, in reality I am afraid this is a fairly important amendment, which will harm instead of helping the chemical industry. A number of persons who are depending upon this mixture and chemical products will be in trouble. I shall read one sentence from the Statement of Objects and Reasons—

"The intention of the Government is to restrict the concessional rate of tax under sub-section (3) of the said section 3 only to components which are visually identifiable and capable of being separated by any mechanical process but not by a chemical process".

That means that Government feels that there is distinction between chemical and mechanical process and by this, the objects that willl come within the purview of sales tax will be more, the quantities which the Government will be realising will be more by the application of this method. A number of items may be 'visible'. So there is a possibility that by the present amendment, more items will be losing the present concessions. That will be the net result. It means more number of persons manufacturing a number of items will be hardly hit. I do not know

whether the Chemical Industry had made any representation. From what I know of chemical industry I can say this will hit a number of persons. That is one point.

Another point is, Government have not given us any information as to how much they are going to realise by this. Whether they are going to realise a small amount, or a big amount, whether it is going to be Rs. ½ a crore, or Rs. 20 lakhs or Rs. 5 lakhs or Re. 1 lakh, what is the total amount they are going to realise. If the Hon. Minister will give that information to the House we will be in a better position to judge the proper nature of this taxation and also the necessity for this taxation ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர்களே, இது ஏதோ புதிய வரி என்று கருதிக் கொண்டு பேசுகிறார்கள். இது புதிய வரி அல்ல. ஏற்கெனவே இருக்கிற வரிக்கு அரசாங்கத்தின் புதிய விளக்கத்துடன் தந்து இருக்கிறோம். உயர்நீதி மன்றத்தை அவமதிக்கிற முறையில் இப்படிச் சட்டத்தை திருத்திக் கொண்டே போகிறீர்கள் என்று அங்கத்தினர் சொல்கிறார்கள். அரசாங்கத்தின் கொள்கையை விளக்கும்போது அதிலே உயர் நீதிமன்றம் குறை சொல்லலாம். அப்படிச் சொல்லும்போது அரசாங்கத்தின் கொள்கையை வலியுறுத்தி அதற்கு புதிய விளக்கத்துடன் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது அரசாங்கத்தின் சாதாரண நிகழ்ச்சிகளில் ஒன்று.

புதிய வருமானம் எவ்வளவு என்று கேட்டார்கள். ஏற்கெனவே வந்து கொண்டு இருக்கும் வருமானம் தான். புதிய வருமானம் ஒன்றும் இல்லை. வனஸ்பதியை கடலை எண்ணெயை வைத்துக் கொண்டு தயார் செய்கிறார்கள். கடலை எண்ணெய்க்குப் பல முறை வரி உண்டு. வனஸ்பதியிலிருந்து கடலை எண்ணெய்யை கெமிகல் பிராஸஸ்ஸால் தான் பிரிக்க முடியும். மெகானிகல் பிராஸஸ்ஸால் பிரிக்க முடியாது. அதற்கு வரிச் சலுகை 2 பைசா வீதம் வேண்டுமென்று கோர்ட்டுக்குப் போனார்கள். கெமிகல் பிராஸஸ்ஸால் பிரித்தாலும் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

அரசாங்கத்தின் நோக்கம் மெகானிகல் பிராஸசில் பிரித்தால் தான் சலுகை. கெமிகல் பிராஸசில் பிரித்தால் சலுகை கொடுப்பது இல்லை. இதுதான் விளக்கப்பட்டு இருக்கிறது. புதிய வரி இல்லை. புதிய வருமானம் அரசாங்கத்திற்கு வரப்போவது இல்லை. ஏற்கெனவே வந்து கொண்டிருந்த வருமானம் இடையில் ஏற்பட்ட தீர்ப்பின் காரணமாக நின்று இருக்கிறது. மீண்டும் வசூலிப்பதற்குத் தான் இந்தத் திருத்தச்சட்டம் கொண்டு வந்து இருக்கிறோம். ஆகவே இந்தத் திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு, அங்கத்தினர் அவர்களுடைய தீர்மானத்தை வற்புறுத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. விநயகம் : அமைச்சர் கூறிய விளக்கம் புரிகிறது. ஏன் அரசாங்கம் கெமிகல் பிராசஸிற்குச் சலுகை தரமாட்டோம் என்று சொல்கிறது. அதற்குக் காரணம் என்ன? மெகானிகல் பிராசஸிற்கு மட்டும் சலுகை தரக் காரணம் என்ன? To justify this taxation இதை விளக்க வேண்டும். இரண்டும்

ஒன்றுதானே? மெகானிகல் பிராசஸ் மூலமாகச் செய்தால் செலவு குறைவாக இருக்கிறது. கெமிகல் பிராசஸ் மூலமாக பிரித்தால் செலவு அதிகமாகிறது.

What is the object of the Government in discriminating between these two ? Of course they went to the court but they did not meet with success. What is your object in insisting on it ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மெகானிகல் பிராஸஸில் பிரிப்பது என்பது, உதாரணமாக, ரேடியோ இயந்திர சாதனத்தின் மூலமாகப் பிரிக்கலாம். பிரித்த ரேடியோவை திரும்பவும் ஒன்று சேர்த்து ரேடியோவாக மாற்றலாம். அதே போல் சைக்கிள். இதையும் ஒவ்வொரு பார்ட்டாகப் பிரித்து திரும்பவும் சேர்க்கலாம். இப்படித் தனித்தனியாக வரும்போது சலுகை அளிக்கலாம். கடலை எண்ணெய்க்குப் பலமுனை வரி உண்டு. அதிலிருந்து வனஸ்பதி தயார் செய்யப்படுகிறது. வனஸ்பதியை கெமிகல் பிராசஸ் மூலமாகத்தான் பிரிக்கலாம். அதற்கு வரிச் சலுகைத் தர வேண்டுமானால், கடலை எண்ணெய்க்கும் 2 பைசா வரிச் சலுகை அளித்தாக வேண்டும். ஏற்கனவே இருக்கும் வரிக்கு விளக்கம் செய்து, தெளிவுபடுத்தி இந்தச் சட்டம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. புதிய வரி இல்லை. ஆகவே இந்த மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பொதுவிற்பனை வரி நான்காம் திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 22/70) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு—2

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—

"பிரிவு 2 சோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே,

I move the following amendments :—

"In the proposed new Explanation, for the words 'or by a mechanical process, and not by a chemical process', *substitute* the words 'or by a mechanical or chemical process".

தலைவரவர்களே, இந்தத் திருத்தத்தின் மீதான முழுமையான விவாதம் நடைபெற்றுவிட்டது. ஆனாலும் இந்தத் திருத்தத்தை முன் மொழிகிற சந்தர்ப்பம் இப்போது தான் ஏற்பட்டு இருக்கிறது. இந்தத் திருத்தத்தை முன்மொழிந்து இருக்கிறேன். அமைச்சரவர்கள் பதில் அளித்தார்கள், என்றாலும் கூட நான் என் கருத்தைச் சொல்ல

ஆசைப்படுகிறேன். இந்த மெகானிகல் பிராசஸ் மூலமாக ஒன்று சேர்ப்பவர்களுக்கும், கெமிகல் பிராசஸ் மூலமாக அடையாளம் கண்டுகொள்ள முடியும் என்ற நிலையில் இருப்பவர்களுக்கும் ஒரு வேறுபாடு காட்டி இருக்கிறது என்ற நிலையை நம்மால் மறுக்க முடியவில்லை. தலைமை நீதி மன்றம் இந்த வாதத்தை ஒப்புக் கொள்ளவில்லை. இதை நாம் மீண்டும் வலியுறுத்தி இருக்கிறோம். இது நல்லதல்ல. உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையிலே இந்த மசோதாவைக் கொண்டுவரத் தேவையில்லை என்று சொல்லி இந்த மசோதாவை கை விடுமாறு அமைச்சரவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மீண்டும் நான் வலியுறுத்துகிறேன். உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பை அவமதிக்கும் வகையில் இந்த மசோதா கொண்டு வரப்படவில்லை. அரசாங்கத்தின் சட்டத்தின் மீதுதான் உயர் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறது. அரசாங்கத்தின் நோக்கத்தைப் பற்றித்தான் ஒரு திருத்தம் கொடுக்கப்பட்டு விளக்கம் சொல்லி இருக்கிறோம். ஆகவே திருத்தத்தை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டு, மசோதாவை நிறைவேற்றவேண்டும், என கூறிக்கொள்கிறேன்.

திரு. இராமமூர்த்தி அவர்களின் திருத்தத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு எண் 2, பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு எண் 3, குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : "இம்மசோதா நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

அவை அலுவல் வரிசையில் மாற்றம்—தொடர்ச்சி

The Hon. Thiru M. KARUNANIDHI : Sir, under rule 21(3) Sir, I move that item (10) be taken up after item (5) under Government Bills.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.